பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 28 ஞாயிற்றுக்கிழமை 14.08.2022 கதிர் 170

## இலங்கைப் பெற்றோருக்குப் பிறந்த பெண்ணுக்கு இந்தியக் கடவுச்சீட்டு

தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் 1986 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழ்ப் பெற்றோருக்குப் பிறந்த பெண்ணை, இந்தியப் பிரஜை எனத் தீர்ப்பளித்த சென்னை மேல்நீதிமன்ற மதுரைக் கிளை, அவருக்கு கடவுச்சீட்டை வழங்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

தற்போது திருச்சி அகதிகள் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் கே.நளினி என்ற ☞ 2

# யாழ். பல்கலையில் செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல்





செஞ்சோலைப் படுகொலையின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியிலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி இலங்கை விமானப் படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் பாடசாலை மாணவிகள் 54 பேரும், பணியாளர்கள் 7 பேருமாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். மேலும், அந்தக் கொடூர தாக்குதலில் 150 இற்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தனர்.

செஞ்சோலைப் படுகொலையின் 16 ஆம் ஆண்டு ☞ 2

# ஏதோவொரு வழியில் சர்வகட்சி ஆட்சி உறுதி

## நீதி அமைச்சர் விஜயதாஸ திட்டவட்டம்

**சர்வகட்சி ஆட்சி அமைப்பதற்கு ஏதேனும் அரசியல் கட்சி எதிர்ப்புத் தெரிவித்தால் சேர விரும்பும் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைப்போம்.**

**- இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.** ☞ 2



## 16 வயது மாணவன் நீரில் மூழ்கி மரணம்

ரிதிகம பிரதேசத்தில் உள்ள கால்வாயில் நீராடச் சென்ற பாடசாலைக் குழுவொன்றில், ஒரு மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 16 வயதுடைய பொல்கொல்ல பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவர்கள் கொகரெல்ல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு விளையாட்டுப் போட்டிக்காகச் சென்று விட்டு லொறியில் திரும்பி வந்து கொண்டிருந்தபோது இந்தக் கால்வாயில் நீராடுவதற்காகச் ☞ 2

## இலங்கையில் மீண்டும் மருந்துகள் தட்டுப்பாடு

நாடளாவிய ரீதியில் பல வைத்தியசாலைகளில் மீண்டும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைகளும் நிறுத்தப்பட்டுள்ளன என்று அதன் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே ☞ 2

## கட்டுப்பாடுகளுடனேயே சீனக் கப்பலுக்கு அனுமதி


### இந்திய உறவில் விரிசல் இல்லை என்கின்றார் இலங்கைப் பிரதமர்



சீனக்கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் பிரவேசிப்பதால் இலங்கை - இந்திய உறவில் விரிசல் ஏற்படும் என்று வெளியாகும் செய்திகளை அடியோடு மறுக்கின்றோம். ☞ 2

## மீண்டும் நாடு முடங்குமா?

### சுகாதார அமைச்சு பதில்



இலங்கையில் நாள்தோறும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களும் கொரோனா மரணங்களும் அதிகரித்து வருகின்ற நிலையில், மக்கள் சுகாதார விதிமுறைகளை உரியவாறு கடைப்பிடிக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றின் தாக்கத்தால் மீண்டும் நாட்டை முடக்கும் எண்ணம் இல்லை என்று சுகாதார அமைச்சர் ☞ 2

# புலம்பெயர் தமிழர்களின் உதவியை எதிர்பார்த்தே தடையை நீக்குகிறோம்



### பிரதமர் தினேஷ் விளக்கம்

புலம்பெயர் தமிழர்களையும் அவர்களது அமைப்புக்களையும் தடைப்பட்டியலில் வைத்துக் கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அவர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனவே, அவர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக முதற்கட்டமாக சில அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடைகளை நீக்கியுள்ளோம். ☞ 2

## எரிபொருள் பெற ஒரு எண்ணின் கீழ் பல வாகனங்ககளைப் பதிய அனுமதி



அதிகளவான வாகனங்களைக் கொண்ட வணிகங்கள் தமதுவணிகப்பதிவுஎண்களுடன் (BRN) தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திரத்துக்கான பதிவை பெறமுடியும் என்று இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனம் (ICTA) தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்கள் மற்றும் வணிகங்கள் வணிகப்பதிவு எண்களின் கீழ், ஒன்று அல்லது பல கைப்பேசி எண்கள் மூலம் ☞ 2

## வடக்கில் காணி விற்பனை மோசடி: பாதிக்கப்பட்டோர் முறையிடுங்கள்

### ஆளுநர் ஜீவன் வேண்டுகோள்



வடக்கு மாகாணத்தில் உள்ள தமது காணி மோசடியாக ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது போலியான உறுதிப்பத்திரங்களால் ஏமாற்றப்பட்ட காணி உரிமையாளர்கள் தமது விவரங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநரின் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்க முடியும். ☞ 2

## கஞ்சா செடியுடன் ஒருவர் சிக்கினார்

ஹாலி - எல பகுதியில் வீட்டுத் தோட்டம் ஒன்றில் கஞ்சா செடிவளர்த்தவர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே குறித்த 63 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஞ்சா செடி 15 அடி உயரம் வரை வளர்ந்துள்ளது.

## திருடிய 15 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளுடன் ஒருவர் வசமாக மாட்டினார்

வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவான தங்க நகைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பத்தேகம - ஹல்பதொட்ட பகுதியில் மீட்டியகொட பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்தக் கைது இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

இதன்போது, கடந்த 2ஆம் திகதி மீட்டியகொட - அளுத்வல பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து திருடப்பட்டிருந்த சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்தச் ☞ 2

## ஏதோவொரு வழியில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் கூறு கையில்,

சர்வகட்சி ஆட்சிக்கு ஏதேனும் அரசியல் கட்சி எதிர்ப்புத் தெரிவித்தால் எங்களுக்கு வேறு வழியில்லை. சேர விரும்பும் அரசியல் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைப்போம். இது அனைத்துக் கட்சியாக இல்லாமலும் இருக்கலாம்.

## 16 வயது மாணவன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்றுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவனைப் பிரதேசவாசிகள் மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சடலம் கோனியாகொட வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிரிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். பல்கலையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நினைவேந்தல், யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான தூபியில் இன்று முற்பகல் 11:30 மணியளவில் அனுஷ்டிப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டது.

இதன்போது, படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் திருவுருவப் படத்துக்கு ஈகைச்சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜகுமார் செஞ்சோலைப் படுகொலை தொடர்பாக நினைவுரையாற்றினார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள், மாணவர்கள் எனப் பலரும் இந்த நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இலங்கைப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெண் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிமன்ற இந்தத் தீர்ப்பை அளித்தது.

இலங்கையில் உள்நாட்டுப் போரின் விளிம்பில் இருந்தபோது, தனது பெற்றோர் இந்தியாவுக்கு வந்தனர் என மனுதாரர் கூறினார்.

தான் 1986 ஏப்ரல் 21 இல் மண்டபம் முகாமில் பிறந்தார் எனவும், தற்போது திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக இருக்கின்றார் எனவும் மனுதாரர் தெரிவித்தார்.

வெளிநாடு செல்ல வாய்ப்புக் கிடைத்தமையால், அதற்காக இந்தியக் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்திருந்தார் எனவும் மனுதாரர் குறிப்பிட்டார்.

எனினும், இந்தியக் கடவுச்சீட்டுக்கான விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டபோது, தமது குடியுரிமை குறித்து அதிகாரிகளுக்குச் சந்தேகம் இருந்ததால், அது நிலுவையில் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்திய மண்ணில் பிறந்ததால், 1955 ஆம் ஆண்டின் இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின்படி, தான் ஒரு இந்திய குடிமகன் என்பதை மனுதாரர் நனினி வலியுறுத்தினார்.

1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 3 இன் படி, 1950 ஜனவரி 26 மற்றும் 1987 ஜூலை 1 இற்கு இடையில் இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் இந்தியக் குடிமகன் என்பதை நீதிபதி ஜீ.ஆர் சுவாமிநாதன் சுட்டிக்காட்டினார்.

இந்த வழக்கில், மனுதாரர் 1986 ஆம் ஆண்டு, மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள இலங்கை அகதிகளுக்குப் பிறந்தவராவார். தற்போது திருச்சி அகதிகள் முகாமில் வசித்து வருகின்றார். சட்டத்தின்படி, அவர் ஒரு இந்தியக் குடிமகன். எனவே, அவர் கடவுச்சீட்டுப் பெறத் தகுதியானவர் என்று தீர்ப்பளித்த நீதிபதி, மனுதாரருக்கு கடவுச்சீட்டு வழங்க திருச்சி கடவுச்சீட்டு அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

ஆனால், பல கட்சிகளின் ஆதரவைப் பெற முயற்சிக்கின்றோம். சர்வகட்சி ஆட்சியை ஸ்தாபிப்பதற்கும் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கும் தொடர்பு இல்லை - என்றார்.

## இலங்கையில் மீண்டும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைத்தியர் ஹரித அலுத்கே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மருந்துத் தட்டுப்பாடு தொடர்பில் அனைத்து வைத்தியசாலைகளிலிருந்தும் அறிக்கை கோரப்பட்டுள்ளது என்றும் வைத்தியர் ஹரித அலுத்கே மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கட்டுப்பாடுகளுடனேயே ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

இந்தக் கப்பலின் வருகை தொடர்பில் எழுந்த சர்ச்சையான கருத்துக்களையடுத்து இலங்கை அரசு இது தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்தது. கப்பல் வருகைக்குச் சில கட்டுப்பாடுகளையும் விதித்தது. அதற்கு இணங்கியே குறித்த கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வருகின்றது.

எமக்கு இந்தியாவும் சீனாவும் முக்கியமான நாடுகள். எந்த நாடுகளையும் நாம் பகைக்க முடியாது. இரு நாடுகளும் இலங்கைக்கு உதவிகளை வழங்குகின்றன. எனவே, இரு நாடுகளையும் நாம் அரவணைத்துக்கொண்டே பயணிக்க வேண்டும் - என்றார்.

## மீண்டும் நாடு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கெஹலிய ரம்புக்வெல ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 181 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 67 ஆயிரத்து 916ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே மேலும் 5 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இந்த மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டில் பதிவான மொத்தக் கொரோனா இறப்புகளின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 619 ஆக அதிகரித்துள்ளது.

## எரிபொருள் பெற ஒரு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதிவு செய்யலாம் என்று அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, http://fuelpass.gov.lk என்ற இணையத்தள முகவரிக்கு பிரவேசித்து, வணிக பதிவு எண் (BRN) வகையின் கீழ், முதலாவது வாகனத்தைப் பதிவு செய்யலாம்.

அதன்பின் பதிவுசெய்யப்பட்ட கைப்பேசி எண்ணின் சுயவிவரத்தில் உள்நுழைந்து, 'Add' என்பதை அழுத்துவதன் மூலம் தமது வணிகத்துக்குரிய மேலும் பல வாகனங்களை சேர்க்க முடியும் என்று இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனம் (ICTA) தெரிவித்துள்ளது.

இதேவேளை, புதிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறைமைக்கு மிக விரைவில் பதிவு செய்யுமாறும், சட்டவிரோதமான முறையில் எரிபொருளைப் பெறுவதற்கு, முறையற்ற விதத்தில் அதனை பயன்படுத்த வேண்டாம் என்றும் வலுசக்தி அமைச்சு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

## இலங்கைப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் உதவிகளைப் பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்கவுரையில் இதனை அவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் மீதும் தடையை வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்க்க முடியாது. இதைக் கருத்தில் கொண்டே முதற்கட்டமாகச் சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க அரசு முடிவெடுத்துள்ளது.

தொடர்ந்து தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் அமைப்புகள் குறித்தும், தனிநபர்கள் தொடர்பிலும் அரசு அவதானம் செலுத்தும் - என்றார்.

## வடக்கில் காணி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் வெளிநாடுகளிலோ அல்லது வேறு எந்தப் பாகத்திலும் இருக்கின்ற நிலையில் அவர்களின் காணிகள் மோசடியான வழியிலோ போலியான உறுதிப் பத்திரங்கள் மூலமோ அபகரிக்கப்பட்டு இருந்தால் அது தொடர்பில் ஆளுநர் செயலகம் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றது. ஆகவே, பாதிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் உரிமை கோரக் கூடிய ஆதாரங்களுடன் காணிப்பதிவு பற்றிய விவரங்களை பழைய பூங்கா வீதியில் உள்ள ஆளுநர் அலுவலகத்துக்கு அனுப்பும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றேன் - என்றார்.

## திருடிய 15 இலட்சம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8 தங்க வளையல்கள், 5 கழுத்தணிகள், 3 மோதிரங்கள், 3 ஜோடி காதணிகள் மற்றும் 4 கையடக்கத் தொலைபேசிகளுடன் 31 வயதுடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பத்தேகமவில் உள்ள அடகுக் நிலையம் ஒன்றில் இரண்டு தங்க நகைகளை அடகு வைத்துள்ளமையைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தகி கொள்ளைச் சம்பவத்தில் மேலும் சில நபர்கள் தொடர்பட்டுள்ளனரா என்று பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சந்தேகநபர் பலப்பிட்டிய நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சீரழிந்த சிவில் நிர்வாகம்

**நீதித்துறையோடு அநாவசியமாகத் தொடர்பாடல் வைத்து, நீதி முறைமைகளில் சட்ட முரணற்ற வகையில் தலையிடாதீர்கள் என்று அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் போன்றோருக்கு சுற்று நிருபம் மூலம் உத்தரவிட அரசுத் தலைமை தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.**

**நீதியரசர்கள், நீதிபதிகள், நீதிவான்கள், நீதிச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதம நீதியரசருக்கு நேரடியாகக் கடிதங்கள் எழுதி, தொடர்பாடல்களை மேற்கொள்ளும் வேலைகளை நிறுத்தும்படி அமைச்சு செயலாளர்கள், மாகாணத் தலைமைச் செயலாளர்கள், மாவட்டச்செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனையோர் சுற்று நிருபத்தின் மூலம் அரசுத் தலைமையால் அறிவுறுத்தப்படவிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.**

**இந்த விதிமுறைக்கு மாறாக நேரடியாக நீதித் துறையினருக்குக் கடிதங்கள் எழுதி, தொடர்பாடல் வைப்பது தாபனக் கோவை விதிகளுக்கு மாறானது என்றும், அது, நீதிமன்றத்தையும் நீதித்துறையையும் அவமரியாதைக்கு உட்படுத்தும் விவகாரமாகக் கருதப்பட்டு தண்டிக்கப்படக்கூடியது என்றும், அரசுத் தலைமை சம்பந்தப்பட்டோருக்கு தெரியப்படுத்த இருப்பதாக அறியவருகின்றது.**

**இது புதிய விடயம் அல்ல. அரச நிர்வாக முறைமையில் காலங்காலமாக விளங்கப்பட்டு, புரியப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு, பின்பற்றப்படும் முறை இதுதான்.**

**இப்போது புதிதாக சுற்றுநிருபம் மூலம் அரசு அதிகாரிகளுக்கு இதனைச் சுட்டிக்காட்ட வேண்டிய அளவுக்கு அரச நிர்வாகக் கட்டமைப்பு போய்விட்டது என்று விசனம் தெரிவிக்கின்றார் ஓய்வு பெற்ற மூத்த முன்னாள் அரசுத்துறை நிர்வாகி ஒருவர்.**

**சிவில் அதிகாரிகளுக்குரிய உயர்நிலை நிர்வாகப் பதவிகளுக்கு படைத்துறையில் இருந்து ஓய்வு பெற்றவர்களைத் தேடிப் பிடித்து நியமித்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முட்டாள்தனமான அணுகுமுறையால் அரச நிர்வாகத் துறைக்கு ஏற்பட்ட கேவல நிலைமை இது என்றும் அவர்கள் கொதிப்புடன் தெரிவிக்கின்றனர்.**

**உயர் சிவில் நிர்வாகப் பதவிகளின் மேன்மை மற்றும் தாரதம்மியம் புரியாமல், அத்துறையில் கற்றுக் குட்டிகளான முன்னாள் படை அதிகாரிகளை அத்தகைய உயர் பதவிகளுக்கு நியமித்து, அரசு நிர்வாக சேவையையே கெடுத்தக் கேவலமாக்கி விட்டார் கோட்டாபய ராஜபக்ஷ என்று அவர்கள் சீறுகின்றனர்.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான மக்கள் போராட்டம் நாடு முழுவதும் பரவலாக வெடித்த போது, ஆங்காங்கே அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான உத்தரவுகளை முன்கூட்டியே வழங்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கைகள் பல நீதிவான் நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டிருந்தன. அந்தப் பொறுப்பற்ற செயலால் நாட்டுக்கு நேரப் போகின்ற மோசமான விளைவுகளுக்கு நீதித்துறையே பொறுப்பு ஏற்க வேண்டி நேரிடும் என எச்சரிக்கும் ஒரு கடிதத்தை பொதுசனப் பாதுகாப்பு அமைச்சுக்குச் செயலாளராக இருந்த முன்னாள் படை அதிகாரி ஒருவர் பிரதம நீதியரசருக்கு முகவரியிட்டு அனுப்பியமை மூலம் நீதித் துறை நேரடிச்அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு இருப்பதாகக் குரல்கள் எழுந்தன.**

**எனினும் பின்னர் சட்டமா அதிபர் இந்த விடயத்தில் தலையிட்டு விவகாரம் சூடு பிடிக்காமல் தவிர்க்க வைத்தார். இந்தப் பின்புலத்திலேயே நீதித்துறையுடன் போய் சும்மா சொறியாதீர்கள் என்ற சாரப்பட்ட வழிகாட்டல் கடிதம் திணைக்களத் தலைவர்களுக்கு இப்போது அனுப்பப்படுகின்றது.**

# கொள்கை, அனுபவம் இரண்டையும் ஒருங்கே கொண்டவர் பத்திநாதர்!

## அவரது மணிவிழாவில் சாள்ஸ் எம்.பி. புகழாரம்

(ந.லோகதயாளன்)

கல்வியியலாளர்களிடம் கொள்கை இருக்காது. ஆனால் வடக்கு மாகாண முன்னாள் பிரதம செயலாளரான பத்திநாதன் கொள்கை, அனுபவம் இரண்டும் ஒருங்கே அமையப்பெற்றவர். அவர் எந்த முடிவு எடுத்தாலும் நான் அந்த முடிவிற்கு விட்டுக் கொடுப்பேன் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதம செயலாளர் அ.பத்திநாதனின் மணி விழா நிகழ்வு மன்னார் நகரில் உள்ள ஆகாஸ் விடுதியில் இடம்பெற்றபோது அதில் பங்குகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

கல்வியியலாளர்கள் எல்லோரிடமும் கொள்கை இருக்காது, கொள்கையாளர் பலரிடம் அனுபவம் இருக்காது அது இரண்டும் இணைந்து இருந்த அல்லது இருக்கின்றவர்களில் அ.பத்திநாதன் முக்கியமானவர்.



2020 நாடாளுமன்றத் தேர்தலின் முன்பு நான் நேரில் சென்று தெரிவித்தேன், நீங்கள் எந்த முடிவு எடுத்தாலும் நான் அந்த முடிவிற்கு விட்டுக்கொடுப்பேன் என்றேன்.

அதேகருத்தை இப்போதும் கூறுகின்றேன். நீங்கள் எந்த முடிவு எடுத்தாலும் நான் அந்த முடிவிற்கு விட்டுக்கொடுப்பேன். – என்றார்.

# அரசாங்க ஊழியர்களுக்கு இனி 5 நாள்களும் வேலை!

அரசாங்கம் ஊழியர்களை வாரத்தில் 5 நாள்களும் பணிக்கு அழைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. எரிபொருள் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு, அரச ஊழியர்களை பணிக்கு அழைப்பது கட்டுப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி ஓரளவுக்கு தணிக்கப்பட்டு, பொது சேவைகள் இயங்கி வருவதால், சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்கள் வழமை போன்று அலுவலகங்களுக்கு வந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. இதன்படி, அரச அலுவலகங்களின் பணிகளை வழமை போன்று நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால், காலதாமதத்தை குறைக்கும் வகையில், அரசாங்க ஊழியர்களை வாரத்தில் ஐந்து நாளகளும் பணிக்கு அழைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட செயலாளர்களுக்கு ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைகளில் மதிய உணவு ஒதுக்கப்படும் நிதி அதிகரிப்பு!

(க.கிருபாகரன்)

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு திட்டத்தை விரிவுபடுத்தும் அதே வேளையில், ஒரு மாணவருக்கு வழங்கப்படும் ரூபா 30 ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் ரூபா 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரையில் ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லை எனவும், அதனை அதிகரிக்க அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் சுகாதாரம் மற்றும் போக்கு பிரிவினால் இந்த நிகழ்ச்சித்திட்டம் தற்போது முன்னெடுக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை 7 ஆயிரத்து 920 பாடசாலைகளில் 11 லட்சம் பாடசாலை மாணவர்கள் பயனடைந்துள்ளனர் என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# பசு மாட்டின் காலை துண்டாடிய விஷமிகள்!

## நிலைமையை பார்வையிட்டார் சரவணபவன்






வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டு இருந்த பசு மாடொன்றின் கால் ஒன்றை விமிகள் துண்டாடியதுடன், மற்றுமொரு காலிலும் காயத்தை ஏற்படுத்தியுள்ளனர். மூளாய் , முன்கோடை பகுதியைச் சேர்ந்த ஒருவர் தனது வாழ்வாதாரத்துக்காக பசு மாடுகளை வளர்த்து வருகின்றார். அந்நிலையில் வழமை போன்று தனது பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் பசுவை மேய்ச்சலுக்காகக் கட்டியுள்ளார். மாடுகளை அவிழ்க்க சென்ற போது பசுவின் கால் ஒன்று துண்டாடப்பட்ட நிலை யில் மற்றுமொரு காலில் காயம் ஏற்படும் வகையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் மாடு கிடந்துள்ளது. அதனை அங்கிருந்து மீட்ட போதிலும் மாடு வலியால் உணவு உட்கொள்ளாது இருக்கின்றது. இது தொடர்பில் வட்டுக்கோட்டை கால் நடை வைத்திய அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் மாட்டின் உரிமையாளர் முறைப்பாடு அளித் துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், இந்தச் சம்பவத்தை அறிந்ததும் நேரில் சென்று பார்வையிட்டதுடன், அந்தக் குடும்பத்துக்கு ஆறுதல் தெரிவித்து இது தொடர்பில் பொலிஸாருடனும் உரையாடியிருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
ஞாயிற்றுக்கிழமை 14.08.2022

# ‘சாத்தானின் வேதங்கள்’ புத்தகம் எழுதிய சல்மான் ருஷ்டி மீது கத்திக்குத்துத் தாக்குதல் ‘ஹரி பொட்டர்’ நூலாசிரியருக்கும் மிரட்டல்!









பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டி மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டது. சல்மான் ருஷ்டி மீதான கத் திக் குத்து தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உட்படப் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டி, கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்காவில் கடும் பாது காப்பின் மத்தியில் வசித்து வருகிறார். அவர் எழுதிய 'சத்தானின் வேதங்கள்' என்ற புத்தகம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதனால் சீற்றமடைந்த இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகள் அவருக்கு மரணதண்டனை விதித்து அறிவிப்பு விடுத்திருந்தன.

நியூயோர்க்கில் சல்மான் ருஷ்டி நேற்று முன்தினம் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்றார். மே டையில் அவர் விரிவுரை அளிக்க இருந்தபோது திடீரென எழுந்த மர்ம நபர் ஒருவர் சல்மான் ருஷ்டியை நோக்கிச் சென்று, கத்தியால் அவரது கழுத்து, வயிற்றுப் பகுதியில் குத்தி னார். இதில் நிலைகுலைந்த சல்மான் ருஷ்டி தரையில் விழுந்தார். உடனே அவர் மருத்துவ ஹெலிக்கொப்டரில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். கத் திக்குத்து தாக்குதலில் படுகாயமடைந்த சல்மான் உயிருக்கு ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். சல்மான் ருஷ்டி மீது தாக்குதல் நடத்திய நபரை பொலிஸார் கைது செய்தனர்.

சல்மான் ருஷ்டி மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் 'ஹரி பொட்டர்' கதையை எழு திய பிரபல எழுத்தாளர் ஜே.கே.ரவ்லிங்கிற்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இவர் சல்மான் ருஷ்டி மீதான தாக்குதல் குறித்து இரங்கல் தெரிவித்து தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து பதிவிட்டிருந்தார். அந்தப் பதி வில், 'அதிர்ச்சியடைய வைக்கும் செய்தி. உடல்நிலை சரியில்லாதது போல் உணருகிறேன். அவர் நலமுடன் இருக்கட்டும்' – எனக் குறிப்பிட்டிருந்தார். ஜே.கே.ரவ்லிங் டுவிட்டர் பதிவிற்கு கீழே கருத்து பதிவிடும் பகுதியில், மீர் ஆசிப் அஜீஸ் என்ற பெயரில் டுவிட்டர் கணக்கு கொண்ட நபர், 'கவலைப்படவேண்டாம் அடுத்து நீங்கள்தான்' என கொலை மிரட்டல் விடுத்து டுவிட் செய்துள்ளார். இதுகுறித்துப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## ரஷ்ய மசகு எண்ணெய்யை சுத்திகரித்து அமெரிக்காவுக்கு விற்கிறதாம் இந்தியா!



ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெயைப் பெற்று, அப்படிப் பெற்ற மையை மறைத்து, இந்தியாவில் அந்த மசகு எண்ணெயில் தயா ரிக்கப்பட்ட எரி பொருள் களை இந்திய கப்பல்கள் அமெரிக்கக் கப்பல்கள் கொண்டு செல்வது கவ லையளிக் கிறது என இந்தியாவுக்கு அமெரிக்கா தெரிவித் துள்ளது.

இந்த தகவலை இந்திய ரிசேர்வ் வங்கியின் துணை ஆளுநர் மைக் கேல் பத்ரா தெரிவித்தார். ரஷ்யாவில் இருந்து பெறப்பட்ட மசகு எண்ணெ யிலிருந்து எரிபொருள் தயாரித்து அவற்றை நியூயார்க் உள்ளிட்ட அமெ ரிக்க நகரங்களுக்கு கடல் வழியாக இந்தியா கொண்டு செல்வதாகவும், ரஷ்யா மீதான அமெரிக்காவின் பொருளாதார தடைகளை மீறி இந் தியா செயல்படுவதாகவும் அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

இந்தியக் கப்பல் ஒன்று ரஷ்யாவின் எண்ணெய் கப்பலில் இருந்து மசகு எண்ணெயை ஏற்றிக்கொண்டு கடல் வழியாக குஜராத்தில் உள்ள ஒரு துறைமுகத்திற்கு கொண்டு வந்திருப் பதாகவும் இந்த தகவலை அமெரிக்கத் திறைசேரித் துறை முறைப்பாடு தெரிவித்துள்ளது எனவும் இந்திய ரிசேர்வ் வங்கியின் துணை கவர்னர் மைக்கேல் பத்ரா கூறினார்.

அதன்படி, குஜராத்தில் உள்ள அந்த துறைமுகத்தில் வைத்து எண்ணெயை சுத்திகரித்து மீண்டும் நியூயோர்க் உள்ளிட்ட பகுதிகளுக்கு இந்தியநிறுவனங்கள் அனுப்புகின்றன என சுதந்திர தின நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பத்ரா கூறினார். ரஷ்யா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைகளின் படி, ரஷ்யாவில் இருந்து எண்ணெய், எண்ணெய் சார்ந்த பொருள்கள், எரிபொருள் உள்ளிட் டவை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல முற்றிலும் தடை விதிக்கப்பட் டுள்ளது. இந்த நிலையில் ரஷ்யாவில் இருந்து பெறப்பட்ட எண்ணெய்யை சுத்திகரித்து அதை இந்திய கப்பல் நியூ யோர்க் போன்ற நகரங்களுக்கு செல் வதாக அமெரிக்கா கூறியுள்ளது.

இந்த விவகாரம் குறித்து புதுடெல் லியில் உள்ள அமெரிக்க தூதரகம் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது.

உலகிலேயே மசகு எண்ணெய் அதிக அளவு இறக்குமதியை செய்யும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. ஆனால் ரஷ்யாவில் இருந்து பெறப்படும் எண்ணெயின் அளவு குறைவு.

இந்த நிலையில் உக்ரைன் போர் தொடங்கியதில் இருந்து ரஷ்யாவில் இருந்து எண்ணெய் இறக்குமதிக்கு பல மேற்கத்திய நாடுகள் தடை விதித் ததால், குறைந்த விலைக்கு ரஷ்யாவில் இருந்து எண்ணெய் வாங்க இந்தியா முடிவு செய்து வாங்கி வருகிறது என்று கூறப்படுகிறது.

## சீனாவுக்கு எதிராக தைவானுக்கு அமெரிக்க ஆதரவு தொடருமாம்!

தைவானை ஆதரிக்கும் உறுதியான நடவடிக்கைகள் தொடரும் என அமெ ரிக்கா தெரிவித்துள்ளது. வொஷிங்டன், சீனாவிடம் இருந்து பிரிந்து தனிநாடாக உருவான தைவானை, தங் கள் நாட்டின் ஒரு பகுதி என கூறி சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது.

இந்தச் சூழலில் சீனாவின் கடும் ஆட்சேபத்தையும் மீறி அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசி சமீபத்தில் தைவானுக்கு சென்றார். இதனால் ஆத்திரமடைந்த சீனா தைவான் மற்றும் அமெரிக்காவை மிரட்டும் வகையில் தைவானை நாலாபுறமும் சுற்றி வளைத்து போர்ப்பயிற்சியில் ஈடுபட்டது. சீனாவின் ஒரே நாடு கொள்கையை உறு திப்படுத்த இது போன்ற போர்ப்பயிற்சிகள் தொடரும் எனவும் சீனா எச்சரித்துள்ளது. இந்தநிலையில் வெள்ளை மாளிகையில் பத்திரிகையாளர்களை சந்தித்த ஜனாதி பதி ஜோ பைடனின் துணை உதவியாள ரும், இந்தோ பசிபிக் ஒருங்கிணைப் பாளருமான குர்ட் காம்ப்பெல், சீனாவின் மிரட்டலுக்கு மத்தியிலும் தைவானை ஆதரிக்கும் அமைதியான மற்றும் உறுதி யான நடவடிக்கைகளை அமெரிக்கா தொடரும் எனத் திட்டவட்டமாக தெரிவித்தார்.

## கனடாவில் 1,059 பேருக்கு குரங்கு அம்மை பாதிப்புகள்

குரங்கு அம்மை பாதிப்புகள் மேற்கு மற் றும் மத்திய ஆப்பிரிக்காவில் காணப்பட்ட நிலையில், தற்போது உலகமெங்கும் பரவி வருகிறது. இந்த வைரஸ் ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு பரவக்கூடியது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ் உள்பட 50க்கும் கூடுதலான நாடுகளில் இந்த பாதிப்புகள் பரவி உள்ளன. அமெரிக்காவில் 10 ஆயிரத்திற் கும் மேற்பட்டோருக்கு பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன. சர்வதேச அளவில் 31 ஆயிரத்தி ற்கும் கூடுதலானோர் இதனால் பாதி க்கப்பட்டு உள்ளனர். 12 பேர் உயிரிழந்து உள்ளனர். இந்தியாவிலும் பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன.

உலக சுகாதார அமைப்பு கடந்த ஜூலையில் இதனை பொது சுகாதார நெருக்கடியாக அறிவித்தது. கனடாவிலும் இதன் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன.

இதுபற்றி கனடாவின் பொது சுகாதார கழகம் வெளியிட்டுள்ள செய்தியில், ஒன்டாரியோவில் இருந்து 511 பேர், கியூபெக்கில் இருந்து 426 பேர், பிரிட்டிஷ் கொலம்பியாவில் இருந்து 98 பேர், ஆல்பெர்ட்டாவில் இருந்து 19 பேர், சாஸ்கத்சிவானில் இருந்து 3 பேர் மற்றும் யுகோன் பகுதியில் இருந்து 2 பேர் என மொத்தம் 1,059 பேருக்கு குரங்கு அம்மை பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நாளை இந்தியாவின் 75 ஆவது சுதந்திரதினம் கோட்டையில் கொடியேற்றுகிறார் ஸ்டாலின்



கோட்டை கொத்தளத்தில் நாளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேசிய கொடி ஏற்றுகிறார் மாற்றுத்தி றனாளிகள் நலனுக்காக அரும்பணியாற்றியோர், வேலைவாய்ப்பை வழங்கிய நிறுவனங்கள், டாக்டர் ஆகியோருக்கான விருதுகளை முதலமைச்சர் வழங்குவார்.

சமூகப்பணியாளர்கள் விருது, சிறந்த மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கான விருது வழங்கப்படும்.

இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தின விழா, இந்த ஆண்டு கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. தமிழக அரசின் சார்பில் ஜோர்ஜ் கோட்டையில் சுதந்திர தின விழா நாளை (திங்கட்கிழமை) நடைபெறுகிறது. இதற்காக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக வீட்டில் இருந்து காரில் வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், போர் நினைவுசின்னத்தில் இருந்து அவரது காரின் முன்னாலும், பின்னாலும் பொலிஸாரின் மோட்டார் சைக்கிள்கள் புடைசூழ அழைத்து வரப்படுவார். கோட்டை கொத்தளத்தின் முன்பாக இருக்கும் அணிவகுப்பு மரியாதை ஏற்கும் மேடை அருகே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வந்திறங்குவார்.

அங்கு தென் இந்திய பகுதிகளின் தலைமைப்படை தலைவர், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படை அதி காரி, தாம்பரம் விமானப்படை தள விமானப்படை அதி காரி, கிழக்கு மண்டல கடலோர காவல்படை இன்ஸ்பெக்டர்ஜெனரல்,தமிழகடி.ஜி.பி.சைலேந்திரபாபு, சென்னை பொலிஸ் கமினர் சங்கர் ஜிவால், கூடுதல் டி.ஜி.பி. (சட்டம் ஒழுங்கு) ஆகியோரை மரபுப்படி முதலமைச்சருக்கு தலைமைச் செயலாளர் அறிமுகம் செய்து வைப்பார்.

பின்னர் அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் மேடைக்கு முதலமைச்சரை தலைமைச்செயலாளர் அழைத்து செல்வார்.

அங்கிருந்தபடி பொலிஸாரின் அணிவகுப்பு மரி யாதையை ஏற்றுக்கொள்வார். பின்னர் கோட்டை கொத்தளத்துக்கு முதலமைச்சர் வருவார். அங்கிருந்தபடி மூவர்ண தேசிய கொடியை காலை 9 மணிக்கு முதலமைச்சர் ஏற்றி வைப்பார். மூவர்ண பலூன்கள் அப்போது பறக்க விடப்படும். அதைத்தொடர்ந்து சுதந்திர தின உரையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்தபடி நிகழ்த்துவார்.

அதன் பின்னர் தகைசால் தமிழர் விருது, டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் பெயரிலான விருது, துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல் ஆளுமை விருது போன்ற பல விருதுகள் வழங்கப்படும்.

# புதிய நாடாளுமன்றக் கட்டடத்துக்கு மாறுவதை எதிர்க்கிறதாம் காங்கிரஸ்





இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் புதிய நாடாளுமன்றக் கட்டட வேலைகள் படுவேகமாக நடந்து வருகின்றன. நவம்பர் மாத கடைசி வாரத்தில்தொடங்கும்நாடாளுமன்றக்குளிர்காலக் கூட்டத்தொடர், புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடக்கும் என்கின்றனர். பழைய நாடாளுமன்றம் அருங்காட்சியகமாக மாற்றப்பட உள்ளது. ஆனால், எதிர்க்கட்சிகள் புதிய நாடாளுமன்றக் கட்டடத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்த வியத்தில் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் அதிரடி முடிவு எடுத்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கும் நாள் அன்று புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் அமர்ந்து நடவடிக்கைகளில் பங்கு எடுத்த பின், அடுத்த நாள் முதல் கூட்டத்தொடரை புறக்கணிக்கப் போகிறதாம் காங்கிரஸ்.

"வரும் 2024 நாடாளுமன்றகத் தேர்தலில், எதிர்க்கட்சிக் கூட்டணி நிச்சயம் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்; மீண்டும் ஆட்சிக்கு வந்து பழைய நாடாளுமன்றக் கட்டடத்திலேயே கூட்டத்தொடரை நடத்துவோம்' என காங்கிரஸார் திட்டமிட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

# காங்கிரஸ் தலைவர் பதவி ஏற்க ராகுல் தொடர்ந்தும் பின்னடிப்பு



காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்க, வழக்கம்போல் ராகுல், 'கம்பி' நீட்டுவதால், 2024 வரை சோனியாவே அந்த பதவியில் நீடிப்பார் என, தகவல் வெளியாகி உள்ளது.

சிதம்பரம், அசோக் கெலாட் ஆகியோர் கட்சியின் துணைத் தலைவர்களாக நியமிக்கப் படுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் களில் தொடர் தோல்விகளை சந்தித்து வருவதால் காங்கிரஸ் கட்சிக்கு நிரந்தர தலைவரை நியமிக்க வேண்டும் என்றும், கட்சியில் சீர்திருத்தம் மேற் கொள்ளப்பட வேண்டும் என்றும், அந்த கட்சியின் மூத்த தலைவர்கள் 23 பேர் போர்க்கொடி தூக்கினர்.

இதையடுத்து உட்கட்சி தேர்தலை நடத்தி நிரந்தர தலைவரை நியமிக்கும் நடவடிக்கைகள், காங்கிரஸில் வேகம் எடுத்தன. தேர்தல் ஆணையத்தின் விதிகளின்படி உட்கட்சி தேர்தல் நடத்த வேண்டும் என்பதால், அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்குள் தேர்தலை நடத்தி முடிக்க, காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்தது. இதற்காக விரைவில் காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தை கூட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்காலிக தலைவரான சோனியா, தன் மகன் ராகுலை நிரந்தர தலைவராக நியமிக்க விரும்புகிறார். கட்சியில் உள்ள ஒரு தரப்பினரும் இதற்கு ஆதரவாக உள்ளனர்.

ஆனால், கட்சியில் உள்ள மூத்த தலைவர்கள் சிலர், ராகுலை தலைவராக ஏற்க தயங்குகின்றனர். 2024 இல் லோக்சபா தேர்தல் நடக்கவுள்ளதால், இந்த நெருக்கடியான நேரத்தில் தலைவர் பதவியை ஏற்க, ராகுல் தயக்கம் காட்டுகிறார். இந்த தகவலை, அவர் தன் தாயாரிடமும் கூறி விட்டார் எனத் தெரிகிறது. இதையடுத்து, 2024 வரை சோனியாவே கட்சித் தலைவராக நீடிக்க வேண்டும் என கட்சியின் மூத்த தலைவர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

காங்கிரஸின் உட்கட்சி தேர்தல் விவகாரங்களை கையாளும் மதுசூதன் மிஸ்த்ரி, தலைமை தேர்தல் ஆணைய அதிகாரிகளை அடுத்த வாரம் சந்திக் கவுள்ளார். அப்போது சோனியா, ராகுல் ஆகியோரிடம் அமுலாக்கத் துறை விசாரணை நடத்தி வருவதால், உட்கட்சி தேர்தல் நடத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக, அவர் தேர்தல் ஆணையத்தில் தெரிவிப்பார் எனக் கூறப்படுகிறது.



# சரோஜ் நாராயணசாமியின் குரல் நேற்றுடன் ஓய்ந்தது

இந்தியாவின் முன்னாள் செய்தி வாசிப்பாளர் சரோஜ் நாராயணசாமி(வயது 87) நேற்று மும்பாயில் காலமானார்.

அகில இந்திய வானொலியில் 35 ஆண்டுக செய்தி வாசிப்பாளராக பணியாற்றியவர் சரோஜ் நாராயணசாமி. தொலைத் தொடர்புத் துறையில் வானொலி சேவை மட்டுமே தனித்துக் கோலோச்சிய காலத்தில் இவரது கம்பீரமான குரலுக்காகவும், உச்சரிப்புக்காகவும் ஏராளமான நேயர்களைப் பெற்றவர். 'செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணசாமி' என்ற அவரது குரலை செவிமடுக்க இந்தியாவில் மட்டுமல்லாமல் இலங்கையிலும் நேயர்கள் காத்திருந்தனர்.

அகில இந்திய வானொலியில் பல ஆண்டுகளாக தமிழ் செய்திப் பிரிவில் பணியாற்றியவர் சரோஜ் நாராயணசாமி. தலைநகர் டெல்லியில் தமிழ் பிரிவில் பணியாற்றிய இவர் 1995ல் ஓய்வு பெற்றார். இவருக்கு தமிழக அரசு கலைமாமணி விருது வழங்கி கௌரவித்தது. இவரது கம்பீரமான குரலுக்காகவும், உச்சரிப்புக்காகவும் ஏராளமான நேயர்களைப் பெற்றவர். இந்நிலையில், மும்பையில் வசித்து வந்த சரோஜ் நாராயண சுவாமி, வயது முதுமை காரணமாக நேற்று காலமானார். இவரது மறைவுக்கு பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# புதிய ஜனாதிபதி இன்று முதல் சுதந்திர தின உரை

*இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினவிழா நாளை நடைபெறுவதையொட்டி ஜனாதிபதி திரௌபதி முர்மு அம்மையார் நாட்டு மக்களுக்கு இன்று மாலை உரையாற்றுகிறார்.*

*ஜனாதிபதி திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு ஆற்றும் முதல் உரை இது என்பது குறிப்பிடத்தக்கது.*

*சமீபத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற திரௌபதி முர்மு கடந்த மாதம் 25 ஆம் திகதி ஜனாதிபதியாக பதவியேற்றார்.*

*நாட்டின் 75 ஆவது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில் நாட்டு மக்களுக்கு முர்மு இன்று மாலை 7 மணிக்கு உரையாற்ற உள்ளார். தூர்தர்னில் இது நேரடியாக ஒளிபரப்பப்பட உள்ளது. அகில இந்திய வானொலியும் ஒலிபரப்புகிறது. அதன் பிறகு, இரவு 9 மணிக்கு அந்தந்த மாநில மொழிகளில் இவருடைய உரை மொழி மாற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்பப்படும்.*

# சாய்ந்தமருதுக் கடற்கரையில் சிரமதானமும் மரம் நடுகையும்





(நூருல் ஹுதா உமர்)

சர்வதேச இளைஞர் தினத்தினை முன்னிட்டு இளைஞர் கழகங்களின் மூலமாகத் தன்னார்வ வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் என்பதைக் கருப்பொருளாகக் கொண்ட கடற்கரை சிரமதானம் சாய்ந்தமருது கடற்கரை பூங்காக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றது.

மரம் நடுகை நிகழ்வு சாய்ந்தமருது சதுக்கத்திலும், அதற்கு அண்மித்த பகுதியிலும், சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்திலும் இலங்கை இளைஞர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு இடம் பெற்றது.

இலங்கை இளைஞர் கழகத்தின் தலைவர் எஸ்.ஏ.எம். அஸ்லமின் ஒழுங்குபடுத்துதலில் அக்கழகத்தின் உறுப்பினர்களின் ஆதரவுடன் நடைபெற்ற இந்நிகழ்வின் போது சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரியும், இளைஞர் சேவை அதிகாரியுமான எம்.டீ.எம். ஹாரூன், சாய்ந்தமருது பிரதேச இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். மீலுள் இலாஹி, பிரதேச இளைஞர், யுவதிகள், மீனவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## தம்பலகாமம் சமுர்த்தி வங்கியின் புதிய கட்டடத்துக்குக் கால்கோள்





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சமுர்த்தி வங்கிக்கான புதிய கட்டட நிர்மாணத்திற்கான அடிக்கல்நடும்நிகழ்வு முள்ளிப்பொத்தானையில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதி தலைமையில் நேற்றுக் காலை இடம் பெற்ற இந்த அடிக்கல் நடும் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என்.ஜயவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார். மத அனுஷ்டானத்துடன் கட்டட நிர்மாண அங்குரார்ப்பண வைபவம் சுப நேரப்படி காலை 10.22 க்கு இடம் பெற்றது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஊடான நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 90 லட்சம் ரூபா செலவில் திருகோணமலை – கண்டி பிரதான வீதியில், முள்ளிப்பொத்தானையில் உள்ள வங்கிக்குச் சொந்தமான காணியில் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் ஏ.ஜீ.சம்பிக்க பண்டார, மாவட்ட சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சுதீஸ்னர், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரன், மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் கே.நபீல், தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ. ஆர்.எம்.சித்திக், வங்கி முகாமையாளர் எம்.ஏ.ஹஸ்புல்லா உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## சேருநுவர காட்டுப் பகுதியில் உயிரிழந்து கிடந்த யானை!

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள சிறிமங்களபுர காட்டுப்பகுதியில் யானையொன்று நேற்று முன்தினம் இறந்த நிலையில் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இறந்த நிலையில் காணப்படும் யானை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருக்கக்கூடுமென தெரிவிக்கப்படுகின்றது. அந்த யானையின் உடம்பில் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்தமை போன்ற காயம் காணப்பட்டுள்ளது.

அந்த இடத்திற்கு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்றுக் காலை வருகை தந்து உயிரிழந்த யானையைப் பார்வையிட்டனர். மேலும், யானையின் உயிரிழப்பு சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## வீரமுனைப் படுகொலைகலின் 32 ஆவது வருட நினைவேந்தல்





(காரைதீவு நிருபர் சகா)

1990 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதி வீரமுனையில் இடம் பெற்ற மிலேச்சத்தனமான கொடூரப் படுகொலைகளின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வீரமுனையில் இடம்பெற்றது.

தமிழினத்தின் புனித தலமான ஆலயத்திற்குள் புகுந்து இராணுவத்தினரும், முஸ்லிம் குழுவினரும் நடத்திய இனவெறி வேட்டையிலேயே 55 பேர் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்பதற்காக 32 ஆவது வருடமாக இந்நினைவேந்தல் நடாத்தப்பட்டு வருகிறது .

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.கோடீஸ்வரன், பிரபல சமுக செயற்பாட்டாளர் செல்வராஜா கணேஷ் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டனர்.

அங்கு தவிசாளர் ஜெயசிறில் கூறுகையில் –

இந்த சதிகாரர்களை நாங்கள் மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம். எதிர்கால சந்ததிக்கு இதனை எடுத்தியம்புவதும் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவம் இடம்பெறக்கூடாது என்பதற்காகவும் இதனை நடத்தி வருகின்றோம். –எனக் குறிப்பிட்டார்.

# யாழ். நகரின் அபிவிருத்திகள் தொடர்பில் இந்திய அரசிடம் கோரிக்கை முன்வைப்பு!

## நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு நிகழ்வில் முதல்வர் மணிவண்ணன்

யாழ். மாநகரத்துக்குள் கட்டடங்களை நாங்கள் எதிர்பார்க்கவில்லை.அபிவிருத்தியை தந்தால் சந்தோசம். அதற்கான கோரிக்கையை இந்திய அரசாங்கத்திடம் முன்வைக்கின்றேன் என யாழ். மாநகர சபையின் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபை மற்றும் சைவசமய விவகாரக்குழுவின் எற்பாட்டில் நல்லையம்பதி அலங்காரக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு வெளியிடப்படும் 30 ஆவது நல்லைக்குமரன் மலர் வெளியீடு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில், யாழ். மாநகர சபையின் ஆணையாளர் கவிஞர் த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ். மாந கர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் குறிப்பிட்டார்.



மேலும் தெரிவிக்கையில் –

இந்திய அரசாங்கம் யாழ். மாநகரப்பகுதியில் பல உதவிகள் செய்ய வேண்டும். யாழ்ப்பாண மாநகர சபைக்குரிய நகர மண்டபம் யுத்தத்தால் அழித்து ஒழிக்கப்பட்டு தற்காலிகமான இடத்திலே மாநகர சபை இயங்கிக்கொண்டு இருக்கின்றது. அதுவும் நல்லைக்கந்தனின் இடத்துக்கு சொந்தமான ஆதனத்திலேயே தற்காலிகமாக மாந கர சபை இயங்கிக்கொண்டு இருக்கின்றது.

கண்ணுக்கு எட்டிய வசதிகள் எதுவும் அங்கு கிடையாது. நல்லூர் கந்தனின் தர்மகர்த்தாவின் வடிவமைப்பிலே இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கட்டிக்கொண்டு இருந்த சூழ்நிலையிலே, அதிலும் அதற்போது எற்பட்டிருக்கு பொருளாதார நெருக்கடி காரணமாக யாழ்ப்பாண மாநகர சபைக்கான கட்டடத் தொகுதிக்கான கட்டுமானப்பணிகளை இடைநிறுத்துமாறும், அதனைக் கைவிடுமாறும் இலங்கை மத்திய அரசாங்கத்தால் முடிவு எடுக்கப்பட்டு அந்த ஒப்பந்தம் ரத்து செய்வதற்கான நடவடிக்கை மிக விரைவாக எடுக்கப்பட்டு வருகின்றது.

அதிலும் அரைவாசி நிர்மாணப்பணிகள் மாத்திரம் இடம்பெற்று இருக்கின்றன. இதில் இயங்க முடியாத சூழ்நிலையில் கட்டுமானப்பணிகள் எல்லாமே கைவிடப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது. அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்யாமல் அதனையும் தொடர்ந்து முன்னெடுத்து மாநகர சபைக்கான பாவனைக்காக எடுத்துகொள்ள வேண்டும் என்று பலரிடம் முனைப்பு செய்து வருகின்றோம். யாழ்.மாநகர சபைக்கான நிதியை ஒட்டுமொத் தமாகப் பயன்படுத்தத் தயாராக இருக்கின்றது. இது எமது சக்திக்கு அப்பாற்பட்ட விடயமாக இருக்கின்றது. அந்தவகையில், ஆரம்பத்தில் இதற்கான கட்டட மதிப்பீடு 160 கோடி ரூபாவாக இருந்தது. அதில் 94 கோடி ரூபாவுக்கான நிதிகள் செலவுகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

84 கோடியே 50 லட்சம் ரூபா நிதியுதவி தேவையாக இருக்கின்றது. தற்போதைய விலை மதிப்பீடு அடிப்படையில் 200 கோடியைத் தாண்டி நிற்கின்றது. இந்தியாவிடம் அதற்கான கோரிக்கையை முன்வைக்கின்றோம்.அதனை இந்திய அரசாங்கம் செய்து தருமாக இருந்தால் யாழ். மாநகர சபை மீண்டும் தமது சொந்தக் காலில் நிற்கின்ற இடத்தை பிடிக்கும் என்ற நப்பாசையில் வேண்டிக்கொள்கின்றேன். அதனையும் தாண்டி தாய் நாடு என்பதை தாண்டி இந்திய தொப்புள் கொடியுறவை மன்றாட்டமாகக் கேட்பதும் கால காலமாக உரிமைக்காக போராடியவர்கள் அந்த இனத்துக்காக – விடுதலைக்காக –கௌரவ வாழ்வுக்காக – இருப்பைத் தக்கவைப்பதற்காக – இந்தியா தன்னான உதவிகளை பொருளாதார ரீதியான உரிமைகளைக் கௌரமாக பெற்று வாழ்வதற்கு உரிமைக்காகவும்,இந்தியா உதவ வேண்டும் அதுதான் தலையான கோரிக்கை. அதனையும் இந்தியா செய்யும் என்று நம்புகின்றேன்.

இந்தியாவை தாய் நாடாகப் பார்க்கின்றோம். தொப்புள் கொடி உறவுகள் வாழ்கின்ற இடமாகப் பார்க்கின்றோம்.அது இந்தியாவின் பொருளாதாரத்தின் பாதுகாப்புக்கும், அந்த வகையில் வடக்கு,கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் இந்தியாவின் நலனுக்கு எதிராக விரோதங்களுக்கு செல்லமாட்டார்கள் என்ற உறுதியையும், உத்தரவாதத்தையும் வழங்குகின்றேன் என்றும் யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில், யாழ். இந்திய உதவித் துணைத் தூதரகத்தின் தூதுவர் ராகேஸ் நடராஜ், இந்து கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் சமயத்தவைர்கள் மாநகர சபையின் உறுப்பினர்கள்,நிர்வாக உத்தியோகத்தர்கள்,கல்வியியலாளர்கள், சமய பெரியார்கள் பலரும் கலந்துகொண்டனர்.







# வடக்கிலிருந்து மடுத்தலம் நோக்கி பக்தர்களின் நடைபயணம் ஆரம்பம்

மன்னார் மடுமாதா ஆலயத்தின் ஆவணி திருவிழா நடைபெறவுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தின் பல பாகங்களில் இருந்தும் இன, மத பேதமின்றி மடு திருத்தலம் நோக்கிய பக்தர்களின் நடைபயணம் ஆரம்பமாகியுள்ளது.

பக்தர்களால் ஆரம்பிக்கப்பட்ட நடைபயணம் நேற்று (சனிக்கிழமை) பாண்டியன்குளம், நட்டன்கண்டல் பகுதியை வந்தடைந்துள்ளது.

நாளை (திங்கட்கிழமை) மடு அன்னையின் ஆவணி திருவிழா நடைபெறவுள்ள நிலையில் வடக்கில் உள்ள மாவட்டங்களில் இருந்து மக்கள் பாதயாத்திரையாக செல்கின்றார்கள்.

முல்லைத்தீவு – இரணைப்பாலை, வற்றாப்பளை பகுதிகளில் இருந்து அதிகளவிலான மக்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்ய நடைபயணம் மேற்கொண்டு வருகின்றார்கள்.

கடந்த வருடம் நாட்டில் ஏற்பட்டிருந்த கொவிட் தொற்று காரணமாக ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் இந்த வருடம் அதிகளவான மக்கள் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்ய நடைபயணம் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பக்தர்கள் மன்னார் எல்லை கிராம பாதையான பாண்டியன் குளம், நட்டாங்கண்டல், பாலம்பிட்டி சென்று அங்கிருந்து மடுவிற்கு செல்வதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூதூர் அரபுக் கலாசாலையின் 48 ஆவது பட்டமளிப்பு விழா





மூதூர் நத்வதுல் உலமா அரபுக் கலாசாலையில் 48 ஆவது பட்டமளிப்பு விழா நிகழ்வு நேற்று சனிக்கிழமை நத்வதுல் உலமா பெண்கள் பிரிவு வளாகத்தில் நடைபெற்றது.

நத்வதுல் உலமா கல்லூரியின் அதிபர் அஷ்ஷேஹ் எம்.எம்.கரீம் ஹஸ்ரத் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷே எஸ்.எல்.எம்.நௌபர் (கபூரி) , மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.அரூஸ், மேலதிக மாகாணக்கல்வி பணிப்பாளர் எம்.எம்.ஜவாத் (நளீமி), வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி இஸட்.எம்.எம்.முனவ்வரா நளீம், பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எம். அப்பாஸ் ஆகியோ கலந்து சிறப்பித்தனர்.

மேலும் 13 க்கு மேற்பட்ட தொகுதிகளைச் சார்ந்த 60 ஆண், பெண் உலமாக்கள் பட்டம் பெற்று கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.08.2022இல் வெளியிடப்பெற்றது.